4. மனுவான வார்த்தை (திருவிருந்துப் பாடல்))

பாடல்: கிறிஸ்து ராஜன்

இசை:ஜெரால்ட்

பாடியவர்: நிரஞ்சனா

இசை இயக்கம்: Fr.டெனிஸ் வாய்ஸ்

மனுவான வார்த்தை உணவானது
மண்ணோர்கள் வாழ்ந்திட உயிரானது
அனைவரும் அருந்திடவே
அன்பினில் வளர்ந்திடவே
தரணியில் உருவானது
தனை தரும் விருந்தானது

1. நாவினில் நுழைந்து தேகத்தில் இழைந்து
   வாழ்வினில் வளம் தரும் உணவு இது
   பாவத்தை களைந்து பாசத்தில் கலந்து
   வானத்தில் இணைந்திடும் உணவு இது

2. தாகங்கள் மறைந்து ஆனந்தம் நிறைந்து
   ஆத்துமம் நலம் பெறும் உணவு இது
   ஆதியில் உரைத்த வார்த்தையின் நிறைவு
   ஆண்டவன் தனைதரும் உணவு இது.